பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 21 புதன்கிழமை (05 - 01 - 2000) *VALAMPURI* ஒலி: 17

## ஜனாதிபதியின் வானொலி உரை எப்படி இருந்த போதிலும்;

# மக்கள் நலன் கருதி சமாதானம் மலர

# அரசுக்கு ஆதரவுதர ஐ.தே.க தயார்!

## ஐ.தே.க பிரமுகர் தகவல்

(கொழும்பு)

**ஜனாதிபதி பண்டாரநாயக்கா குமாரதுங்கா நேற்று முன்தினம் இரவு தொலைக்காட்சி, வானொலி ஊடாக 3 மணி நேரம் ஆற்றிய உரையை ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் கருணாசேன கொடித்துவக்கு வெகுவாகச் சாடியுள்ளார்.**

**ஜனாதிபதியின் இவ்வுரையானது சிறுபிள்ளைத்தனமானதும் தான்தோன்றித்தனமானதாக இருந்த போதும் நாட்டின் நலன் கருதி அரசுடன் ஒத்துழைக்க தயாராக உள்ளோம்.**

ஜனாதிபதி சந்திரிக்காவின் வானொலி மற்றும் தொலைக் காட்சி உரை எப்படி இருந்த போதிலும் சகல இன மக்களுக்கும் இடையே சமாதானம் மலர எந்நேரமும் ஒத்துழைக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்காவின் உரையிலிருந்து அவர் தான் தோன்றித் தனமாக நடந்து கொள்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இருந்த போதிலும் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் மோசடி செய்ய முடியாத சூழ்நிலையில் அரசு தடுமாறியுள்ளது என்பதை அவரது உரை தெளிவாக புலப்படுத்தியுள்ளது.

ஊடகத் துறையினரையும், வர்த்தகப் பிரமுகர்களையும் ஜனாதிபதி தனது உரையில் சாடியுள்ளமையை அவதானிக்கும் போது அரசாங்கத்தின் எதேச்சை அதிகாரப் போக்கை உணரக்கூடியதாக உள்ளது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத் தலைவர் ஜனதாஸபீரிஸ் பத்திரிகையாளர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதிக்கு கண் தானம் வழங்க முன்வந்த சாதாரண பொதுமகன்

(கொழும்பு)

கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது ஒரு கண்பார்வையை இழந்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவுக்கு தனது கண்ணைத் தானமாகக் கொடுக்க தயார் என்று இராஷபக்ஷ முதலால் டிக்கிரி பண்டா பகிரங்கமாக அறிவித்துள்ளார்

இராஷபக்ஷ முதலால் டிக்கிரி பண்டா வடமேல்

[6 ம் பக்கம் பார்க்க]

## ஹெலி தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

யாழ்குடா கரையோரப் பகுதியில் நேற்று காலை 11.40 மணியளவில் ஹெலியில் இருந் றொக்கற் தாக்குதல் மேற்கொண்டதாக தெரியவருகிறது.

இத்தாக்குதலின் சேதவிபரம் தெரியவரவில்லை.

# நோர்வே வெளியுறவு அமைச்சரின் வருகைக்கு தமிழ்கட்சிகள் வரவேற்பு

[கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவிவரும் இனப்பிரச்சனையை சுமுகமாகத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்கு இலங்கை வரவிருக்கும் நோர்வே வெளியுறவு அமைச்சரின் வருகையை தமிழ்க் கட்சிகள் பெரிதும் வரவேற்றுள்ளன.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக அரசையும் விடுதலைப்புலிகளையும் சமரசப் பேச்சுவர்த்தைக்கு கொண்டுவருவதில் நோர்வே அரசு தீவிர முயற்சி எடுத்து தருவதை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஜோசப பரராஜசிங்கம் எம். பி. தெரிவிக்கையில்; நோர்வே அரசின் ஆக்கபூர்வமான முன்முயற்சிகளை, முன்னெடுத்துச் செல்லும் நல்ல சந்தர்ப்பத்தை அரசும் விடுதலைப் புலிகளும்

(6 ம் பக்கம் பார்க்க)

# 41 வேலையற்ற பட்டதாரிகளுக்கு சமுர்த்தி முகாமையாளர் பதவி

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி முகாமையாளர்களாக நியமனம் பெற்ற 41 பட்டதாரிகளின் பெயர் விபரம் நேற்று வெளியாகின.

இவர்கள் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கருகிலுள்ள உயர் கலைக் கல்லூரியில் தவறாது ஒன்று கூடுமாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் திரு தி, சந்திரகாசன் கேட்டுள்ளார்.

சமுர்த்தி முகாமையாளர்களாக நியமனம் பெறுபவர்களின் பெயர் விபரம் வருமாறு;

**நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு-**

குலசேகரம்பிள்ளை கருணநிதி, பி.பி.எ நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை

கனகசபை கௌரிதேவி பி.எ 12ம் வட்டாரம் நெடுந்தீவு

**வேலணை பிரதேச செயலர் பிரிவு-**

நாகரத்தினம் நகுலராணி

(6 ம் பக்கம் பார்க்க)

## ஓயாதஅலைகள் - 3 நடவடிக்கையில் புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

விடுதலைப் புலிகளினால் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுவரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின்போது புலிகள் தரப்பில் உயிரிழந்தமேலும் மூவரின் பெயர்கள் விவரம் வருமாறு-

★ கப்டன் தமிழரசன் (அமிர்தராசா யுகந்தன்) முள்ளியவளை

★ வீரவேங்கை இயல்வீரன் [நத்தாரியஸ்இந்திரா (யாழ்ப் பாணம்

வீரவேங்கை சாந்தமூர்த்தி ]நல்லதம்பி ஹரிகரன்] மட்டக்களப்பு

## கொழும்பு சென்ற பஸ்ஸில் குண்டு மீட்பு; பயணிகள் மீது தீவிர விசாரணை!

ஹற்றனில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்டு வந்த பஸ் வண்டி ஒன்றில் குண்டு ஒன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹற்றனில் இருந்து கொழும்பு நோக்கி வந்த இந்த பஸ்வண்டியை ஊறுகொடவத்தவில் நேற்று காலை 10.30 மணியளவில் இராணுவச் சோதனை சாவடியில் வைத்து சோதனை இட்டபோதே இக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

பஸ் வண்டியில் இக்குண்டு மீட்கப்பட்டதைத் தொடர்ந்து பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகள் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.

## முன்னாள் எம்.பி. இராமமூர்த்தியும், உதவியாளரும் நேற்று விடுதலை

(கொழும்பு)

அனுமதியின்றி சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்த முன்னாள் நாடாமு மன்ற உறுப்பினர் ஆர். ராமமூர்த்தியும் அவரது மெய்ப்பாதுகாவலர் சத்திய சீலனும் நீர் கொழும்பு நீதி மன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீரிகம பொலிசாரால் சட்டவிரோத ஆயுதம் வைத்

(6 ம் பக்கம் பார்க்க)

## நான்கு பிள்ளைகளின் பெற்றோரை விடுதலை செய்யக்கோரி மனு தாக்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் விசேட அதிரடிப் படையினரால் காரணம் ஏதும் கூறப்படாது கைது செய்யப்பட்டு கடந்த 11 மாதங்களாக சிறைவைக்கப் பட்டிருக்கும் வீரசிங்கம், பரமேஸ்வரி என்ற நான்கு பிள்ளைகளின் பெற்றோர் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

தமது நான்கு பிள்ளைகளினதும் எதிர்காலம் கருதி யாவது தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமெனக் கோரிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### களுத்துறை சிறைச்சாலையில்

## தடுத்து வைக்கப்பட்டோரின் விசாரணை இம்மாதத்திற்குள் நடாத்தி முடிக்கவும்

[களுத்துறை)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் களுத்துறைச் சிறைச் சாலையில்ததடுத்து வைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கான விசாரணைகளை இம்மாத இறுதிக்குள் நடத்தி முடிப்பதற்கான அறிவுறுத்தல்களை பொலீஸ் திணைக்களம் சட்டமா அதிபர் காரியாலயத்திற்கு அனுப்பியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையின் பேரில் பொலீஸ் திணைக்கள சட்டப் பிரிவினர் கடந்த வாரம் தடுப்புக்காவலில் உள்ள

(6ஆம்பக்கம் பார்க்க)

# இளங்கலைஞர்களின் நல்வாழ்வில் அறவழிப் போராட்டக்குழு அக்கறை

## - பிரதேசச் செயலர் தெரிவிப்பு-

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சியின் இளங் கலைஞர்கள்ன் எதிர் கால கலை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான நவீன கலை அரங்கு ஒன்று இல்லையே என்ற குறையை அறவழிப்போராட்டக் குழு அண்மையில், இந்த இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்ப தினத்தன்று பூர்த்தி செய்துள்ளது. இது எனக்கு மட்டும் அல்ல இந் நாட்டு சமுதாயத்திற்கே பெருமையும் மகிழ்ச்சியும் தரும். ஒரு வரலாற்றுப் பெருமை மிக்க செயலாகும்.

அறவழி கலையரங்கம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தென்மராட்சிப் பிரதேசச் செயலர் திரு. பு. சுந்தரம் பிள்ளை இவ்வாறு தனது மகிழ்ச்சிப் பெருக்கைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி, கைதடி, நுணாவில்அறவழிப்போராட்டக் குழு நவீன முறையிலான பாரிய கலை அரங்கம் ஒன்றை அமைத்திருந்தது.

அக் கலை அரங்கம் கடந்த முதலாம்திகதி திறந்துவைக்கப்பட்டது. அறவழி மழலைகள் பூங்கா, பாலர் பாடசாலை மாணவர்கள், அறவழி கீதம் பாடி, நிறுவனக் கொடி ஏற்றி, மங்கள வாத்தியங்கள் முழங்கத் திறந்துவைத்தனர்.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. வி.ஜீ. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தனது தலைமை உரையில் கூறியதாவது:

இந்த நாட்டில் வாழும் மக்களிடையேஒரு சமூகத்தாரின் உரிமைகள் மறுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வாழ்ந்துவந்தனர். இறைவன் சந்நிதானத்தில் சென்று வணங்க உரிமையில்லை, வைபவங்களில் பங்கெடுக்க உரிமை இல்லை. மயானத்தில் அவர்களின் இறுதிக் கிரியைகளைச் செய்யக் கூட உரிமை தராது மறுக்கப்பட்டிருந்த ஒரு கால கட்டத்தில் தான் அறவழிப் போராட்டக்குழு உருவானது. இது காந்திய வழியில், அறவழியில்தமதுஉரிமைகளுக்காகப் போராடி உரிமைகளை வென்றெடுத்தது.

கல்வி, விவசாயம் உட்பட பல பாரிய சேவைகளை இக் குழு இப்பொழுது சமாதான முறையில் செய்துவருகிறது. நாட்டு மக்களின் பாராட்டையும் பெற்று வளருகிறது என்றார். அமரர் முன்னாள் சாவகச்சேரிஎம்.பி.வ.ந.நவரத்தினமும்இங்குநினைவு கூரப்பட்டார்.

தொடர்ந்து அருட்பணியாளர் ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார், பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, திரு. எஸ். சக்தி கிரீவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். மழலைகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(க)

## இந்த நூற்றாண்டில்

# இணையற்ற நாயகன் மாக்ஸே முதலாளித்துவ வாதிகளின் கணிப்புஇது

(கொழும்பு)

கார்ள் மாக்ஸை எள்ளி நகையாடிய முதலாளித்துவ வாதிகள் இன்று இந்த நூற்றாண்டின் இணையற்ற நாயகனாகஅவரைத்தேர்ந்தெடுத்துள்ளனர்.

இது புதிய மிலேனியத்திற்குள்நுழையும் மாக்ஸியத்திற்குக் கிடைத்த முதல் வெற்றி என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எமது அமைப்பு சிங்கள பேரினவாதத்திற்கு எதிராகச் செயற்படும் அமைப்பு என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு கைகொடுத்துதவ நாமும் தமிழர் அமைப்புகளும் உடன்பாடு கொண்டுள்ளோம்.

இனவாதத்தின் மூலம் இடதுசாரி அமைப்புக்களின் வளர்ச்சியை முறியடிக்க முனையும் பேரினவாதிகளினதும் முதலாளித்துவ வாதிகளினதும் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன என்பதை எமது அமைப்பு அண்மைக்காலத்தில் அடைந்துவரும் வெற்றிகள் நிரூபித்துள்ளன.

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு தொழிலாளியும் ஒரே நாட்டின் பிரஜைகள் என்ற மனப்பக்குவத்துடன் ஒரே அணியின் கீழ் திரண்டால் மட்டுமே இடதுசாரிகளின் ஆட்சியொன்றை இந்த நாட்டில் நிறுவ முடியும் என்றார். [க-14]

# விளையாட்டுச் செய்தி

## சிட்னி டெஸ்ட் போட்டியில்

## அவுஸ்திரேலியா அணி இந்தியாவை

# புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 2ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி கலையரங்கில் காலை 10.30 மணியளவில் கப்டன் டி. எம். குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர்கள் வருமாறு தலைவர் டி. எம்.குணசிங்கம் உபதலைவர்கள் கே. அப்புத்துரை, எஸ். மார்க்கண்டு செயலாளராக கே. மனோகரன், உபசெயலாளர் எஸ். கேசவன், பொருளாளர் எஸ். சுதாகரன் நிர்வாக உறுப்பினர்களாக கே. ஏகாம்பரம், எஸ். சூசை, எஸ். ரமணன், எ. சண்முகநாதன் என். முருகதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-27)

## கலைவார நிகழ்வு

# 53 கசிப்பு போத்தல் பறிமுதல்

[நெல்லியடி]

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மேற்பார்வை உத்தியோகத்தர்களால் கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.45 மணியளவில் எதிரி உடுப்பிட்டி வீதி மாலுசந்திக்கு அண்டிய பகுதியில் வைத்து ஐம்பத்திமூன்று போத்தல் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டது. [க-18]

# மற்றைய நபரும் கைது

[கொழும்பு]

கொழும்பு மாநகரசபை குண்டு வெடிப்பு தொடர்பாக மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிக் குடியிலுள்ள பஸ் கொம்பனி ஒன்றில் திருத்துநராகக் கடமையாற்றி வந்த நவரட்ணம் என்ற வாலிபரே கைது செய்யப்பட்டவராவார்.

மேற்படி குண்டு வெடிப்பு சம்பந்தமாக மட்டக்களப்பின் தாளங்குடாவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே.

[க-14]

# (இராசி பலன்)

05.01.2000 புதன்கிழமை [தமிழுக்கு மார்கழி21] சதுர்த்தசி இரவு 10.51 வரை; மூலம்நாள்முழுவதும், மரணயோகம், ராகு காலம் பிற்பகல் 1.01 முதல் 3.28 வரை, சுப நேரம் மாலை5.33 முதல் 7.03 வரை.

மேடம்- கடினவாக்கு, அலட்சியம், வேலைப்பழு.

இடபம்- முதன்மை நிலை, வேதாந்தம், பணவரவு.

மிதுனம்-விருந்தினர் மகிழ்ச்சி காரியசித்தி, பயணம்

கடகம்-குழப்ப நிலை, பகைவர்துயர், சகோதரர்பகை.

சிங்கம்- மனவேதனை, அயலவர் பகை, வெறுப்பு.

கன்னி- புதிய சிந்தனை, குடும்ப மகிழ்ச்சி, உற்சாகம்.

துலாம்- கடன் படல், கவலையான செய்தி, யோசனை.

விருச்சிகம்-புதிய நட்பு, தாயார் உபதேசம், தான தர்மம்.

தனுசு-எதிரியினால் சினம், மனக் கொதிப்பு. நண்பர் உதவி.

மகரம்- தொழில் சிறப்பு, கடித உறவு, புதியமுதலீடு.

கும்பம்- தாய்வழி உறவு, தெய்வ சிந்தனை, குழந்தைப் பாசம்.

மீனம்- சபலமடைதல், அதிகாரிகள் சினம், மனச் சுமை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

# தமிழரின் இன்றைய நிலைக்கு காரணம் கல்வி, பொருளாதாரத்தில் கவனமின்மையே

(கொழும்பு)

சிறுபான்மைத் தமிழ்மக்கள் வட கிழக்கிலும் மலையகத்திலும்பல்வேறுபட்டபிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து நிற்க வேண்டியதான துர்ப்பாக்கிய நிலைமைக்கு இட்டுச் செல்லப்பட்டமைக்கு அவர்களது சமூக பொருளாதார கலை கலாச்சார கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதில் அக்கறை காட்டாமையே காரணமாகும்.

இவ்வாறு விவசாய தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள புதுவருடச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அச் செய்தியில் நாட்டில் புரையோடிப்போய் இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வை ஏற்படுத்தி மக்களிடையே ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் ஆண்டாக இந்த புத்தாயிரமாம் ஆண்டு அமைய வேண்டும்.

இதுவரை காலமும் ஆட்சிக்குவந்த பெரும்பான்மை இன தலைவர்கள் தங்களுடைய இன மக்களின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டே செயலாற்றினார்கள். 2000 ஆம் ஆண்டில் அந்த நிலையை மாற்றி மக்கள் அனைவரினதும் நல்வாழ்வுக்கும் நாட்டு நலத்திற்கும் முன்னேற்றம் ஏற்படும் வகையில் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க திடசங்கற்பம் கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

## கொழும்பு குண்டு வெடிப்பில்

செய்யப்பட்டனர். (க-27)

இருக்கின்ற இனப்பிரச்சி துள்ளார்.

சிட்னி டெஸ்ட் போட்டியில்

# அவுஸ்திரேலியா அணி இந்தியாவை இனிங்சால் வெற்றி கொண்டது

(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இனிங்சாலும் 141 ஓட்டங்களாலும் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி கண்டது.

331 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் என்ற நிலையில் தொடர்ந்து தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலியா அணி மிகவும் சிறப்பாக ஆடியது.

அவுஸ்திரேலியா அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 552 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவோ தமது அணி ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்ததைத் தொடர்ந்து தனது இரண்டாம் இனிங்சை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மிக வேகமாக ஓட்டங்களைக் குவித்தாலும் மக்ராத்தின் பந்துவீச்சின் முன் அச் சோடியினால் தொடர்ந்து நிலைக்க முடிவில்லை தொடர்ந்தும் இந்திய அணி மளமளவென விக்கெட்டுக்களை இழக்க வி. வி. எஸ். லக்ஸ்மனும் அனில் குஷ்னேயும் சற்று நிதானித்து ஆடினர்.

ஆனாலும் ஆட்டம் நிறைவுறும் வேளையில் அவுஸ்திரேலிய அணிவீரர்கள் சிறப்பாக பந்து வீசி இந்திய அணியை 261 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்தனர்.

இந்திய அணி சார்பில் வி. வி. எஸ் லக்ஸ்மன் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி தனது முதலாவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார்.

இப்போட்டியில் ஜஸ்ட்டின் லாங்கர் 223 ஓட்டங்களையும், வி. வி. எஸ். லக்ஸ்மன், 167 ஓட்டங்களையும், றிக்கி பொன்டிங் ஆட்டமிழக்காது 141 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அஜித் அகார்கர் டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து 5 போட்டிகளில் ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டமிழந்து புதிய உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

நடைபெற்று முடிந்த 3 போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி 3 - 0 என்ற நிலையில் இத் தொடரை வென்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அவுஸ்திரேலிய இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முத்தரப்பு போட்டிகள் எதிர்வரும் 9-ம் திகதி ஆரம்பமாகின்றன.

(த- 29)

## கலைவார நிகழ்வு

[யாழ்ப்பாணம்]

சுப்பர்மடம் கல்வி அபிவிருத்தி கழகத்தினால் கடந்த 25 ஆம் திகதியிலிருந்து 3 ஆம் திகதி வரை ஒரு வாரமாக நடத்தப்பட்ட கலைவார நிகழ்வுகளில் 888 புள்ளிகளை பெற்று மஞ்சள் இல்லம் முதலாம் இடத்தையும், 807 புள்ளிகளைப் பெற்று நீல இல்லம் இரண்டாம் இடத்தையும் 696 புள்ளிகளைப் பெற்று பச்சை இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றது.

## நல்லூரில் மருத்துவ முகாம்

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் மாதாந்த மருத்துவ முகாம் அண்மையில் நீராவியடி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் 96 பேர் நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற பொதுமருத்துவ சிகிச்சையையும் 76 பேர் கண் பரிசோதனையையும் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

இவ் மருத்துவ முகாமில் வைத்திய கலாநிதிகளான ஜி. பிரதீப்குமார், கே. எஸ் அகிலன் ஆகியோருடன் மருத்துவ பீட மாணவர்களும் இணைந்து சிகிச்சைகளை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

கொழும்பு குண்டு வெடிப்பில்

# மீட்கப்பட்ட தடயப் பொருட்கள் இரசாயனப் பகுப்பிற்கு அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மாநகரசபைத் திடலில் கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து அப்பகுதியிலிருந்து 517 தடயப் பொருட்களை இரகசிய புலனாய்வுப்பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

குண்டுவெடித்த இடத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து 84 உத்தியோகத்தர்களைக் கொண்டு பரிசோதனை செய்தபோதே இந்த 517 தடயப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த தடயப் பொருட்கள், இரசாயனப் பகுப்பாய்வாளர்களால் பரிசோதனை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

தடயப் பொருட்களுள் தற்கொலைக் குண்டுதாரிப் பெண் அணிந்திருந்ததாகக் கருதப்படும் ஊதாநிற உடையின் துண்டொன்றும் பகுப்பாய்வாளருக்குஅனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது.

# தலதா மாளிகை புனரமைப்பு பணிகள் முடிவடையும் நிலையில்

(கொழும்பு)

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான இலங்கையின் பிரசித்தி பெற்ற பௌத்த விகாரையான கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

சேதத்துக்குள்ளான பிரதான நுளைவாயிலின் சந்திர வட்டக் கல்லும் யானை உருவங்களும் புனரமைக்கும் பணி எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் முடிவடைந்துவிடும் என்றும் ஏனைய பகுதிகள் எதிர்வரும் போயா தினத்திற்குள் பூர்த்தியாகிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 9 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் புனரமைப்புப் பணிகளை தொல் பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் மேற்பார்வைசெய்து வருகின்றது.

[க-14]

# புதிய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கியபின்னரே பொதுதேர்தல்

## சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய மாற்றுக்குழு எம்பிக்களின் ஆதரவுடன் புதிய தேர்தல் சட்டத்தை உள்ளடக்கிய அரசியல் அமைப்புச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

ஐ. தே. கட்சியின் மாற்றுக் குழு எம்பிக்கள் மேற்படி விடயத்தை அரசுக்கு வலியுறுத்தியதைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில் புதிய தேர்தல் சட்ட மூலம் விகிதாசாரத் தேர்தல் முறைமையும் தொகுதி வாரிப்பிரதிநிதித்துவத்தையும் கொண்ட ஜேர்மனிய தேர்தல் முறையைப் போல இருக்குமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சிறுபான்மை மக்களையும் கட்சிகளையும் பாதிக்காத வகையில் இத்தேர்தல் சட்ட மூலம் அமைவதினால் தமிழ் முஸ்லீம் கட்சிகள் இப்புதிய சட்ட மூலத்தை உள்ளடக்கிய அரசியல் அமைப்பு கூட்டத்துக்கு ஆதரவு தருமென நம்பப் படுகிறது

இச்சீர்திருத்தத்தின்படி விகிதாசார ரீதியில்50 வீதம் தொகுதி அடிப்படையில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தொகுதி வாரி அடிப்படையில் சுமார் 120 பிரதிநிதிகளும் விகிதாசார அடிப்படையில் சுமா 100 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்

தற்போதையவிகிதாசாரத் தேர்தல் தேசிய பட்டியல் ரீதியில் 225 எம்பிக்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## புங்குடுதீவு

# படுகொலைச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை

## த.வி. கூட்டணி கடிதம்

[கொழும்பு]

புங்குடுதீவு இளம் அந்தணப் பெண் பாலியல் வல்லுறவுக்குப்பின் படுகொலை செய்யப்பட்டு 5 நாட்களுக்கு மேலாகியும் அது தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. என அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைமையிலான தொல்லை தவிர்ப்பு குழுவினருக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ். மாநகரசபை உறுப்பினர்களான அரவிந்தன் தி. முகுந்தன் எஸ். எஸ். கணேந்திரன் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இப் படுகொலையில் கடற்படையினர் சம்மந்தப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் வெளிப்படையாக தெரிவித்திருந்த போதும் இதுவரை அடையாள அணிவகுப்பு நடத்தாமை கவலை தருவதாக உள்ளது. என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளனர்.

# உழைப்பாளர்களை இழந்தபெண்களுக்கு திருக்கோவிலில் நிதி உதவி வழங்கல்

(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேச தம்பட்டைக் கிராமத்தில் குடும்பத்தலைவரை இழந்த பெண்கள் ஒன்று சேர்ந்து ''உழைப்பாளிகளை இழந்த பெண்கள் அமைப்பு'' ஒன்றினை அண்மையில் உருவாக்கி உள்ளனர்.

உழைப்பாளிகளை இழந்த 75 பெண்கள் இணைந்துள்ள இவ் அமைப்பின் நோக்கம் சுயதொழில் 'முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உதவிகளை அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்தும் பெற்றுக் கொள்வதாகும்.

இதன் முன்னோடியாக இறால் வளர்ப்புக்கான ஆலோசனைகளை வழங்குவதுடன் தேவையான நிதியுதவியினை பாராளுமன்ற உறுபினர் டக்ளஸ் தேவானந்தா வழங்க இருக்கிறார்.

# சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க புதிய நெறியாளர் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய நெறியாளர் குழு ஒன்று அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக் குழுவில் ஏழு பேர் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்த நெறியாளர் குழுவின் தலைவராக திரு.செ.சுப்பிரமணியமும், உப தலைவராக திரு.செ. மகேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நெறியாளர் குழுவின் விபரம் வருமாறு; திரு. செ.செந்தூரன். திரு.ஆ.இராஜரத்தினம், திரு. உ.பரமநாதன், திரு.தா.இராஜநாயகம், திரு.ந.பாலச்சந்திரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# கோவிலில் கொள்ளையிட முனைந்தவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவிலுள்ள மஞ்சத்தொடுவாய்இந்துக்கோவிலை உடைத்து கொள்ளையிட முனைந்த நபரொருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குமாரவேல் பாக்கியநாதன் என்ற இச்சந்தேகநபர் கோவிலின் கதவை உடைத்து உள்ளே சென்றவுடன் பொது மக்கள் 'கள்ளன் கள்ளன், எனக் கத்தியபோது ஓட்டம் பிடிக்கவே பொது மக்கள் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்துள்ளனர்.

காத்தான்குடி பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்நபர் இன்று மட்டிக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென பொலிஸார் தெரிவித்தனர்.

# தினகரன் பத்திரிகைக்கு எதிராக நட்டஈடு கோரும் சோபிக தேரர்

(கொழும்பு)

தினகரன் பத்திரிகையில் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி வெளியான கட்டுரை தன்னை அவதூறு செய்வதாக கோரி வீரவிதான இயக்க தலைவர் கோபிக தேரர் தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு மார்ச்மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மேலதிக நீதவான் அறிவித்துள்ளார்.

தினகரன் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் தான் ஒரு பௌத்த மத வகுப்புவாதியாக சித்தரிக்கப்பட்டு இருப்பது தன்னை அவதூறு செய்வது போல் உள்ளதாக கூறியிருந்த தேரர். இதற்கு நட்டஈடாக 300 லட்சம் ரூபா தரக்கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (க-14)

# தென்னங்கன்று வழங்குதல்

(வேலணை)

வேலணை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு மூன்று லட்சம் பெறுமதியான தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்குவதற்கு வேலணை பிரதேச சபையின் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பகுதி அரசியல் கட்சிப் பொறுப்பாளருமான ந. கருணாகர குருமூர்த்தி முன்வந்துள்ளார்.

இப்பகுதியின் பொருளாதாரத்தை முன்னெடுக்கு முகமாகவே அவர் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (க)

# அபிவிருத்தி நிலையம் அமைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை போரூட் நல்லொழுக்க நிறுவனத்தின் ஆதரவுடன் பாலர் பாடசாலை ஆசிரியர் அபிவிருத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இந் நிலையத்தினை அமைத்துள்ளனர்.

இந் நிலையத்தினூடாக முன்பள்ளி மாணவர்கள் சம்பந்தமான சகல நடவடிக்கையை முன்னெடுத்து சமூக அபிவிருத்தியை மேற்கொள்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

# புதிய கட்டடம் அமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கசென் அன்ரனீஸ் கிளைக்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது, இப் பகுதி மக்களின் உதவியினால் இப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

பருத்தித்துறை பங்குத் தந்தை அருட் திரு. பீ. எம். இம்மானுவேல் அடிகளார் ஆசியுரை வழங்க பருத்தித்துறை பிரதேசச் செயலர் திரு.ஏ. சிவசாமி புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

(க-52)

## இனப்பிரச்சனை குறித்த

# ஜனாதிபதி சந்திரிகாவின் முயற்சிக்கு இல.கம்யூனிஸ்ட்கட்சி வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா முன்வந்திருப்பதனை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் ராஜாபுஹூறயே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் நலன் கருதியும், நாட்டைப் பிரிப்பதை தவிர, வேறு எந்தவிதமான சமாதானத்திற்கும் விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜானாதிபதி தயார் என்று கூறியதையும் இக் கட்சி வரவேற்றுள்ளது.

அத்துடன் இதே முடிவை கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு வருடங்களுக்கு முன் எடுத்து இருந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும், அரசியல் ஆலோசனைகளை அமுல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (க-5)

## கொழும்பு குண்டு வெடிப்பில்

# பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு விரைவில் நட்டஈடு வழங்கப்படும்

## புனர்வாழ்வு அ.சபை. தலைவர்

[கொழும்பு]

கொழும்பு நகரமண்டப வளவிலும் ஜா எலவிலும் கடந்த 18 ஆம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களில் காயமடைந்தவர்களுக்கும், மரணமானவர்களின் குடும்பங்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் பணிப்பாளர் எம். எச். எம் சல்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த இரு சம்பவங்களிலும் கொல்லப்பட்ட 31 பேருடைய இறுதிச் சடங்குகளுக்கும் பத்தாயிரம்ரூபா வழங் கப்பட்டிருந்தது. இது தவிர இறந்தவர் திருமணம் செய்தவராக இருப்பின் அவரதுகுடும்பத்துக்குஐம்பதாயிரம் ரூபாவும் தனிப்பட்டவராயின் இருபத்தையாயிரம் ரூபாவும் வழங்கப்பட இருப்பதுடன் இச் சம்பவத்தில் மரணமான சிறுவர்களது குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இச்சம்பவத்தில் காயமடைந்த 120 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப் பட உள்ளது.

# சுவரொட்டிப் போட்டியில் முதல் இடம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் நடாத்தப்பட்ட சிறுவர் துஷ் பிரயோகம் சம்பந்தமான சுவரொட்டிப் போட்டியில் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் செல்லையா செல்வதாஸ் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

திருநெல்வேலி கிழக்கு அரசடி லேனைச் சேர்ந்த இவருக்கு பரிசுத் தொகையான 4.000 ரூபா வழங்கப்படவுள்ளது. யாழ் மாவட்ட வலயத்தினால் நடாத்தப் பட்ட ஓவியப் போட்டியிலும் இம் மாணவன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடதக்கது.

# வீதி திருத்தம்

(கரணவாய்)

நீண்டநாட்களாக குன்றும் குழியுமாகக் காணப்பட்ட கரணவாய் குஞ்சர்கடை மண்டான் வீதி அண்மைக் காலமாக கரவெட்டி பிரதேச சபையினால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

[க-27]

## கொழும்பு குண்டு வெடிப்பு

# ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்

கொழும்பு மாநகரசபை குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 10 பொலிஸ் உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவருவதாக வெளியான செய்திகள் தவறானவை என சி. ஐ. டி பணிப்பாளர் கீர்த்தி ஜனநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் இதுசம்பந்தமாக ஜனாதிபதியின் விசேடபாதுகாப்புப் பிரிவினரை சி. ஐ. டி பிரிவினர் நேற்று முதல் விசாரணை செய்ய ஆரம்பித்திருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க-14)

# படையினரால் கைது செய்யப்பட்டோர் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்

மட்டக்களப்பு காரைதீவுப் பகுதியில் நேற்று விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது 20 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் கடுமையான மழை பெய்து கொண்ருடிந்த சமயம் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது அதிரடிப் படையினர் வீடு வீடாகச் சென்று தமது சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சோதனையின் இறுதியில் கைது செய்யப்பட்ட 20 இளைஞர்களும் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் பின்விடுதலை செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கையின் போது எவரும் கைதாகித் தடுத்துவைக்கப் படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (க-14)

# வைத்திய சேவை

மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை தற்போது 24 மணிநேர சேவையை மக்களுக்கு வழங்கி வருகிறது, முன்பும் இவ்வாறு சேவை இடம்பெற்ற போதிலும் இடையில் ஏற்பட்ட நாட்டு நிலைமைகள் காரணமாக இச் சேவை பகல் வேளையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டுப் பலன் - 5

## துலாம்

சித்திரை 3, 4ம் பாதம்: சுவாதி, விசாகம், 3ம் பாதம் வரை பிறந்தவர்களுக்கும் பெயரின் முதல் எழுத்தாக ரா, ரி, ரு, தே, ரோ, நா, தீ, து, தே, என்னும் எழுத்துக்களைக் கொண்டவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்

ராசிச்சக்கரத்தில் ஏழாவது ராசியாக திகழ்வது துலாம் இந்த ராசியின் அடையாளச் சின்னமாகத் திகழ்வது ''தராசு'' இவ்ராசியினர் எப்போதும் பேசுவதற்கு முன் சிரித்தே பேசுவார்கள், கடவுள் பக்திமிக்கவர்கள். இந்த ராசியினரில் பெரும்பாலானவர்கள் மிகச் சிறந்த அரசியல் வாதிகளாகவோ, நீதிபதிகளாகவோ வழக்கறிஞர்களாகவோ இருப்பார்கள். உறவினர்களின்பால் அதிக பாசம்மிக்கவர்கள், சின்ன உதவியையும் பெரிதாக நினைப்பவர்கள். செய்நன்றி மறவாதவர்கள் பெண்களிடம் நயமாகப் பேசி அவர்களைத் தம்பக்கம்இழுப்பதில் ஆர்வம் மிகுந்தவர்களாக இருப்பார்கள். இவர்கள் தனிமையில் இருப்பதற்கு ஒரு போதும் விரும்பமாட்டார்கள். எதையும் அவசரப்படாமல் காரியம் ஆற்றுபவர்கள். தங்களைப் பொருட்படுத்தாதவர்களை ஏறெடுத்தும் பார்க்காதவர்கள். மோகம் மிகுந்தவர்கள், மோக சக்தி குறைந்தவர்கள் வயோதிபத் தோற்றமுடையவராயினும் வாலிபத் தோற்றமிக்கவர்கள். வாக்குவன்மையிலும் வசீகரத் தோற்றத்தாலும் எவரையும் வசியப்படுத்தக் கூடியவர்கள். இவர்கள் பொறுமையும் சகிப்புத் தன்மையும் மிகுந்தவர்கள். இவர்கள் தங்கள் கருத்தை எந்த இடத்திலும் மனம் துணிந்து எதிர்ப்புக்களுக்கு அஞ்சாமல் எடுத்துக் கூறுவார்கள். நீதி, நேர்மை, நியாயம் ஆகியவற்றிலிருந்தும் சிறிதும் பிறழாதவர்கள் குற்றம்புரிந்தவர்களை தண்டிப்பதில் வல்லவர்கள். சிலருக்கு இளம் வயதில் தந்தையின் ஆதரவை இழக்க கூடியவர்கள். பிறர் சொத்துக்களை அடைய முடியாதவர்களும் இவர்கள் தான் எப்போதும் வம்பு வழக்கற்ற தொழிலிலேயே ஆர்வம் காட்டுவார்கள். கோபம்வருவதை இந்த ராசியினரிடம் காண முடிவதில்லை. முன் கோபம் வந்தாலும் எந்த முடிவையும் எடுக்க முடியாதவர்கள், பேச்சிலே நீதி நியாயத்தைக்காண முடியும். துலாராசிப் பெண்கள் எப்போதும் கலகலப்பாக இருப்பார்கள். தங்கள் செயலால் பிறரைச் சொக்க வைப்பதில் வல்லவர்கள். எந்த விடயத்திலும் ஆளுமையுடன் பேசி தர்க்க நியாயங்களைக் கூறி பிறரைக் கவரக் கூடியவர்கள். நியாய புத்தியோடு நேர்மையை மதிக்கும் பண்புள்ளவர்கள். பலருக்கு பொறுமை இருக்காதவர்கள். இவ்ராசிப் பெண்களில் சிலர் இல்லற ஒழுக்க குறைபாடுகளுடன் வாழ்பவர்கள். இவர்களிடம் பேச்சுக் கொடுத்து மீள்வது கஸ்டம் இவர்களுக்கு செல்வ யோகங்களுண்டு, இவர்களுக்கு திருமணப்பலன்களுக்குரிய பின்னரே யோகமுண்டு. இவர்களுக்கு நல்லகணவன் வாய்த்தால் தெய்வமெனப் போற்றுவர் இல்லையேல் பஞ்சணையில் புரள்பவர்களும் துலா ராசியினரே, ராசியதிபதி சுக்கிரன் அதிஸ்ட நிறம் கடல் நீலம், அதிஸ்ட ரத்தினம் வைரம், அதிஸ்ட எண் ஆறு அதிஸ்ட திசை மேற்கு வழிபடும் தெய்வம் கலைமகள். இவ்ராசியினருக்கு இவ்வாண்டு அட்டமத்தில் சஞ்சரிக்கும் சனி, வியாழன், யோகத்தைத் தரக்கூடியதாகவில்லை. ராகு கேது மாற்றமும் பாதகத்தைத் தரும். வியாழபகவான் தனது பார்வையில் 12, 2, 4ம் இடங்களைப் பார்ப்பது; எதிர்கொள்ளும் கஸ்டங்களை மனம் கலங்காமல் ஏற்றுக் கொள்ளும் நிலை இருக்கும். தொழில்துறைகளில் லாபமின்மையும், பங்காளர் சிக்கல்கள் இருக்கும். தொழிலில் முதலீடு குன்றி கடன்பட வேண்டிய நிலை இருக்கும். குடும்பத்தில்வேற்றுமை தலை தூக்கும். புத்திரர்களால் வீண் செலவுண்டு, உறவினர் தொல்லை தருவர், சொத்துக்கள் வாங்குவதற்கான நிலை தாமதமாகிப் போகும் அலைச்சலும், மன அமைதி குறைவும் தலை தூக்கும் பெண்களாயின் திருமணம் மேலும் தள்ளிப் போகும். மனமுறிவுகள் தீர்வைத்தராது தொழில் புரிபவர்கள் அதிகாரிகளின் வெறுப்புக்குள்ளாவதுடன் பதவி உயர்வுகள் தாமதமடையும், மாணவர்கள் கல்வியில் ஏனோ தானோ என்ற நிலை இருந்து வரும், பரீட்சைகளில் பெறுபேறுகள் மந்தமாக இருக்கும், விவசாயிகளுக்கு விலை பொருட்களுக்கு நியாயவிலை கிட்டாமல் பெருநஸ்டமடைவர்.

## விருச்சிகம்

விசாகம் 4 ஆம் பாதம்; அனுஷம், கேட்டை முடிய வரையுள்ள நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தங்கள் பெயரில் முதல் எழுத்தாக தோ, தா, து, நே, நோ, ய, யி, யு, நீ என்னும் எழுத்துக்களைக் கொண்டவர்க்கும் இந்தப் பலன் பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் எட்டாவது இராசியாக அமைந்திருப்பது விருச்சிகம். விருச்சிகம் என்றால் தேள். இதனைக் கீடராசியென சோதிடத்தில் கூறப்பட்டுள்ளது. இளமையிலே சோதனைகளைக் கடந்தவர்கள் விருச்சிகராசிக்காரர்களே. பார்ப்பதற்கு எதற்கும் அஞ்சாதவர்கள் போல இருந்தாலும் உள்ளூரப் பயந்தவர்கள். இவர்களில் பலர் அடிதடிசண்டையில் ஈடுபட்டு அவயக்குறைபாடுகளை அடையக்கூடியவர்கள். கோபம் மிகுந்தவர்கள்; கோபத்தில் எதைஎதையோ பேசிவிட்டு கோபம் தணிந்தபின் பேசியதை மறந்துவிடும் புத்திசாலிகள், தாம் நினைத்ததைச் சாதிப்பதற்கு பந்தயத்துக்கு கழுதையைப் பூட்டிக் கொள்ளக்கூடியவர்கள், ஞாபக மறதி மிக்கவர்கள், மற்றவர்களை அலட்சியமாகக் கருதுபவர்கள், மனதை ஒருமைப்படுத்த முடியாத சபல புத்திக்காரர்கள் பகைவரிடமும் தம் செயலை நிறைவேற்ற சிரித்துப் பேசுபவர்கள், சிக்கனம் செய்வதாகக் கருதி கருமித்தனம் செய்வார்கள், அலைந்துதிரிவதில்விருப்பமுடையவர்கள், சநதேகம் நிறைந்த இவர்கள் எவரையும் நம்பமாட்டார்கள், சிலருக்கு இளமையிலே காது மந்தமாகிவிடுவதுண்டு. இவர்கள மனதைப் பொருளாலும் பணத்தாலும்மாற்றிவிடமுடியாதவர்கள, காரியப் புலிகள், பெரும்பாலானோர் சுய நலமிகள், தோலிருக்க சுளை விழுங்கும் காரியக்காரர்கள், கடவுள்நம்பிக்கை அதிகமானவர்கள், தாம் செய்யும் பாவங்களையும் அநியாயங்களையும் மன்னிப்பதற்கே கடவுள் இருப்பதாக நம்புபவர்கள் விருச்சிக ராசியாளர்கள்தான்.

விருச்சிகராசிப் பெண்கள் கிடுகிடுவென சீறிவிழும் முன் கோபக்காரர்கள். குடும்பத்தில் செல்வவளமையுள்ளவர்கள், நாட்டுப்பற்று மிக்க இவர்கள் குடும்பத்தில் பந்தபாசம் உள்ளவர்கள். தேவையற்ற பணம் ஈட்ட முடியாத கணவரை இவர்கள் பேசும் முறை பலரை மனவேதனை கொள்ளச் செய்யும், சிலர் கணவர்மார்களுடன் ஒற்றுமையாக வாழ்வதில்லை, இவர்களுக்கு ஆசார நியமங்கள் ஒருபோதும் ஒத்துவருவதில்லை, எப்போதும் குதர்க்கமாகவே பேசி குதர்க்கம் செய்பவர்கள், தாய்வீடுதேடி ஓடுபவர்கள் விருச்சிகராசிப் பெண்கள்தான்.

இந்த ராசிக்காரர்கள் வியாபாரப் பங்காளர்களையோ வாழ்க்கைத் துணைவரையோ தேர்ந்தெடுப்பதற்கு கடகம், கன்னி, தனுசு மீனராசியாளரைத் தேர்ந்தெடுப்பது அதிஸ்டம் தரும். இராசியதிபதி செவ்வாய்; பூஜைக்குரிய தெய்வம் முருகன், அதிஸ்டஎண் ஒன்பது, அதிஸ்டநிறம் செஞ்சிவப்பு, அதிஸ்டவாயில் வடக்குவாயில், அதிஸ்டரத்தினம் ரூபி, விருச்சிக ராசியாளருக்கு இவ்வாண்டு முக்கிய கிரகங்களான வியாழனும், சனியும் ஏழாம் வீட்டில் சஞ்சரிப்பது யோகம். இராகு கேது மாற்றமும் நன்மையே செய்யும் வியாழன் தான் சஞ்சரிக்கும் வீட்டில் இருந்து இராசியை மூன்றாம் பதினோராம் இடங்களைப்பார்ப்பது அதிஸ்டங்களைத் தரும். தொழில் முயற்சிகள் பலன் தரும், பொருளாதார மேம்பாடு உண்டு, பணவருவாய் அதிகமாகும், புதிய முதலீடுகள் இலாபம் தரும், குடும்பத்தில் அன்னியோன்யம் உருவாகும். உறவினர்உதவுவார், திருமணமாகாத ஆண் பெண் இருபாலாரும் அதற்கான பலன்களைப் பெறுவர், பெண்களுக்கு பல்வகைச் சிறப்புக்கள் கிட்டும், தொழில் துறைகளில் பதவி உயர்வும், சுமுகநிலையும் நீடிக்கும், மணமுறிவுகள் நீங்கி வசந்தம் நிலைக்கும், மாணவர்கள் தவறுகளை வருந்தி கல்வியில் ஆர்வம் கொள்வர். நல்ல பெறுபேறுகளைப் பெறுவர், விவசாயிகள் அதிக முயற்சிகளை மேற்கொண்டு லாபமடைவர், கலைஞர்கள் புகழ் பெறுவார்கள், மொத்தத்தில் அதிஸ்ட தேவதை அரவணைப்புண்டு.

- ஜோஸ்யர் அனுஷியா -

# இருபதாம் நூற்றாண்டு இலங்கையில் கல்வியும் தேசிய ஒருங்கிணைப்பும்

கல்வியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் சேர். பொன். இராமநாதன் நினைவுப்பேருரைக்கென தெரிவுசெய்த தலைப்பே காலத்தின் தேவைக்குப் பொருத்தமான தொன்றாகும். பேராசிரியரின் ஆழ்ந்த கல்வியியற்றுறைப்புலம்ம் பளிச்சிடும் பேருரை இதுவாகும். இருபது உசாத்துணை நூல்களைத் தமது உரைக்கு உறுதுணையாகக் கொண்டு கருத்தாழம் மிக்க உரையாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

தேசியம் என்ற பதத்திற்கு தெளிவான விளக்கத்தோடு-சீரிய மேற் கோள்களோடு கட்டியம்கூறும் ஆரம்ப உரை உணர்வுகளைத் தூண்டுவனவாக விறுவிறுப்பாக அமைகிறது. அன்னாரின் பேருரை இன்றைய இன்னல் தோய்ந்த உணர்வு ஞானமற்ற சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் இடித்துரைக்கும் பணியில் அமைந்தமை உரிய காலத்தில் உதிர்க்கப்பட்ட நல்ல கருத்துக்களாகும்.

சமூகப் பன்மைத்துவம் - இலங்கையின் தேசிய உணர்வு மொழிக்கல்வியும் தேசியமும், இனவாதத்தின் எழுச்சி மொழியும் அரசியலும், கல்வியில் இனவாதம், பாடநூல்கள், இரண்டாம் மொழி என்னும் தலைப்புகளில் அச்சொட்டான கருத்துக்களைப் பெய்து யதார்த்தத்தை நிலைநாட்டியுள்ளனர். அவரது விளக்கங்களில் கருத்தினை வெளிப்படுத்தும் நெஞ்சுரமும் நேர்மைத்திறனும் மெச்சத்தக்கது. இன்றைய நிலையையும், அந்நிலையைப் போக்குதற்கு உகந்த ஆற்றுப்படுத்தலையும் தாங்கிய இவ்வேடு சிறியதுதான் – அதன் சீரியகருத்தினால் பெரியதாய், அரியதாய் ஆக்கபூர்வமானதாய் காலத்தினாற் செய்த நன்றியாய் பரிணமிக்கிறது. எனவே ஞாலத்திற் பெரிதென செப்பவும் வேண்டுமோ? இவ்வரிய நூல் அந்தாரகார இருளில் நிலவும் தமிழனுக்கு ஒளிகலை ஒவ்வொருவரதும் கரங்களில் இலங்கவேண்டுமென்பது துணிபு.

- காங்கேயன்

## மிலேனியமே நீ ஏன்........

இலேசான விழிப்பினூடு எழுந்திடாது நோக்குகின்றேன்  
இன்னுமே இருட்போர்வை கலையவில்லை  
மிலேனியம் ஜனனித்து மணியைந்து ஆயிருக்கும்  
மிரட்சியாய் மனம்மட்டும் பேசுகின்றது.  
விவிலியம் சொன்னவாறு வையகம்தான் அழிந்திடுமோ  
விந்தையாய் மீட்கின்றது வேதவாக்கை  
புவியே அழியுமென்றால் புலரும் பொழுதிசைக்கும்  
பூபாளம் எவர்க்கினிமை தந்திடும்?

இருபெரும் போர்நடந்தும் இன்னும் அழியாதுள்ள  
இதையழிக்க இன்னொருபோர் எங்கிருந்தோ  
வருமெனவே அரசியலின் வரலாறு கூறிநிற்க  
வந்ததேனோ மிலேனியமே கூறிடாயோ  
சனத்தொகை உயர்வுக்கொப்ப சண்டைகள் உயர்ந்துள்ள  
சங்கதி தன்னைநீயும் அறிந்திலையோ?  
மனம்மகிழ்ந்தா இங்குவந்து மாட்டுகிறாய் மிலேனியமே  
மறைந்தஉன் சோதரனைத் கேட்கலையோ?

அரசியல் அரங்கினுக்கோ ஆட்கொலைதான் அஸ்திவாரம்  
அடுத்தடி ஆளுக்காட் கழுத்தறுப்பு  
வரலாறிவ் வாறிருக்க வந்ததேனோ மிலேனியமே  
வளர்ந்திட்டால் யாவையுமே வெளிச்சமாகும்  
மனிதம் அரசியல்செம்மை மற்றுள்ள நீதிசட்டம்  
மகளிர்கற்பு வாய்மைநெறிச் சிறப்பெல்லாம்  
புனிதப் புதைகுழியாம் இப்பூமிக்குள் படுத்துறங்கப்  
புரியாது வந்ததேனோ மிலேனியமே.

வதிரி - விஷ்ணுப்ரியா -

## வலம்புரிக்கு வாழ்த்துக்கள்

குடாக்கடல் பெற்ற வலம்புரியே!  
மலரும் புத்தாண்டில் - நீ  
மகுடம் சூட வாழ்த்துக்கள்  
நாற்றிசையின் சேதிதனை,  
என்றிசையும் தீது களைந்து சேர்த்திடு  
பற்பல உடல் அங்கங்களை,  
பார்ப்போர் சுவைக்காய் படைத்திடு  
மேதகு சங்காய் மேன்மையுறட்டும் உன்சேவை

மீசாலை லவ்பேட்ஸ்

## வலம்புரியே என்நாளும் வலம் வா

புத்தாயிரமாம் ஆண்டில் புதுமைகள் பல புரிந்தே  
பித்தான மக்களையும் முத்தாக்கிட் முழுமனத்துடன்  
புறப்பட்ட வலம்புரியே புதிர்மிக்குடைத்  
தன்மானத் தமிழனின் தனிப் பெருந்தன்மைதனை  
தரணியெங்கும் தங்க வைக்க  
என்நாளும் வலம்வருவாய் வலம்புரியே.

தே. திருமுருகராஜன்

உவப்பத்தலைக் கூடி
உள்ளப்பிரிதல்
அனைத்தே புலவர்
தொழில்.
- குறள்

வலம்புரி

## வள்ளுவன் கடைக்கண்

தனம்தரும் கல்விதரும் என்றும் தளர்வறியா மனம்தரும் அபிராமி கடைக்கண்கள் இது அபிராமிப்பட்டரின் ஆத்மார்த்தவாதம். கன்னியாகுமரி முனையில் காலூன்றிய வள்ளுவன் வடதிசை நோக்கி நிற்பினும் கடைக்கண் பார்வை இந்த சிவபூமிக்கும் நல்க வேண்டும். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன் கலைஞர் கருணாநிதியின் கருத்திலே உதித்த இலட்சிய உருவாக்கம் வள்ளுவன் சிலை.

கிறிஸ்தவர்க்கு விவிலிய நூலும் இஸ்லாமியருக்கு திருக்குறானும் வாழ்வியல்வேதங்கள் பரந்துபட்ட அறிவுக்கடலில் நீந்தித் திளைத்தவர்கள் தமிழர்கள். எண்ணற்ற சமய, இலக்கிய நூல்கள் வாழ்வியலுக்கு வகை செய்யினும் வள்ளுவன் தரும் 1330 முத்துக்களும் எங்கள் வாழ்வின் சத்தான சொத்துக்கள்.

ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு அடியென உயர்ந்து 133 அடிக்கு கல்லில் மட்டும் உயர்ந்து நிற்கிறான் வள்ளுவன் கருத்திலே வானத்தை முட்டி, மக்கள் தம்முட்டறுக்கும் பான்மை பெரிதுதான் தமிழ் வேதத்தின்படிவாழ்பவன் தக்கோனாகலாம் மிக்கோர்போற்றும் மேதையும் ஆகலாம் தமிழக அரசு குறள் அனைத்தும் தெரிந்த சின்னக் குழந்தைகளுக்கு பரிசுகள் நல்கி ஊக்குவித்துக் கௌரவிக்கிறது.

எங்கள் மண்ணுக்கும் அத்தகைய வீறும் விருப்பும் இல்லாமல் இல்லை. வாரிவாரி தமிழ்மண்ணை உண்டகாரணத்தால் வாரியெனப் பெயர் கொண்ட விரிகுடா பாண்டிய மண்ணையும் சிவ பூமியையும் சேய்மைப் படுத்திவிட்டதே.

ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் சொந்தக்காரர்கள் நாம் கலையுள்ளம் கண்ணியத்தை மெத்தவளர்க்கும் இடிக்கும் துணையாக குறள்கள் அத்தனையும்

எம்மைக் காக்க வேண்டும்; எம்மைப் பக்குவப் படுத்த வேண்டும். வாழ்விலே வனப்பினை அள்ளித்தரும் ஆசானாக வேண்டும். நாளுக்கு ஒரு குறள் நாம் கற்கவேண் எம் குழந்தைகள் குறள் வழி செவ்வழி எனச் சிந்தை கொள்ள வேண்டும்.

-அன்புடன் ஆசிரியர்

# ரஷ்ய யாப்பை மீறும் எந்த செயலும் முற்றாகவே நிராகரிக்கப்படும்

### - பதில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் -

[மொஸ்கோ]

ரஷ்ய யாப்பையும் திட்டத்தையும் மீறும் எந்தவொரு நடவடிக்கையும் முற்றாக நிராகரிக்கப்படுமென புதிதாக பதவிக்கு வந்துள்ள ரஷ்ய பதில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பேச்சுச் சுதந்திரம், சிந்திக்கும்சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் தனியார் சொத்துக்கான உரிமை போன்ற நாகரிகமான சமுதாயத்தின் அடிப்படைக் கொள்கைகள் ரஷ்யாவினால் தொடர்ந்து பேணப்படுமெனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் இவர் கருத்துக் கூறுகையில்: செச்செனியா மீது ரஷ்ய இராணுவத்தினர் நடத்திவரும் இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் கூறினார்.

அத்துடன் தனது புதுவருட வாழ்த்துக்களைப் படையினருக்கு தெரிவிப்பதற்காக ரஷ்யத் துருப்பினரால் கைப்பற்றப்பட்ட செச்செனிய பிரதேசங்களுக்கு ஜனாதிபதி புட்டின் விஜயம் மேற்கொண்டார்.

ஜனாதிபதி புட்டின் படையினரைச் சந்தித்த பின்னர் அங்கு நடைபெற்றுவரும் ஒவ்வொரு விடயமும் இதுவரை நீதியின்படியே நடைபெற்று வருவதாக ஜனாதிபதி கூறியதை ரஷ்ய தொலைக்காட்சியும், லண்டன் பி. பி. ஸி. யும் தெரிவித்தன.

பிரதமர் பதவியிலிருந்து பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள 47 வயது நிரம்பிய புட்டின் மார்ச் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தனது முழுப் பலத்தையும் பிரயோகிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வறுமையால் வாடிய அமெரிக்க நபர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வறுமை காரணமாக 47 வயதான நபர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவர் தனது மனைவி மூன்று குழந்தைகள் ஆகியோரைச் சுட்டுக் கொன்ற பின், தன்னையும் சுட்டுக் கொன்றுள்ளதாகவும், இவ்வாறு சுட்டுக்கொல்வதற்கு முன்னர், இந்தக் கொலை பற்றி பொலிஸாருக்கு அறிவித்துமுள்ளார்.

இச் சம்பவம் குறித்து இப்பகுதி மக்கள் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளனர். (க- 05)

## எண்ணெய்க் குதம்மீது குண்டுத் தாக்குதல் ஆகாயம் வரை பரவிய புகைமூட்டம்

(புதுடில்லி)

இந்திய மாநிலமான அசாமில் கிளர்ச்சியாளர்கள் என சந்தேகிக்கப்படுவோர் எண்ணெய்க்குழாய் ஒன்றின் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் பெரும் தீ பரவியுள்ளதாக மாநில அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத் தீயினை 10 மணி நேர கடும் முயற்சியின் பின் தீயணைப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் இத்தாக்குதலில் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு ஐக்கிய அசாம் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் தான் பொறுப்பு என்று இந்திய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இத்தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் உளவுத்துறையினர் சம்பந்தப்பட்டிருப்பதாக அசாம் மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் அச்சம்

(இஸ்லாமாபாத்)

எயர்லைன் விமானக் கடத்தலில் பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதும் இந்தியா இதற்குப் பதிலாக ஏதாவது நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என பாகிஸ்தானில் உள்ள செய்தி ஊடக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை விமானக் கடத்தல் காரர்கள் ஐவரும் ஓரிரு நாட்களில் முசாராபாத்திற்கு வந்து சேருவார்கள் என பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் தீவிரவாதத் தரப்புகள் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

## பெறுமதி கூடும் ஆசிய நாணயம்

(புதுடில்லி)

மலரும் புதுவருடத்தில் ஆசிய நாடுகளின் நாணயங்கள் கூடிய பெறுமதியைப் பெறும் என்று சர்வதேச சிரேஷ்ட பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானைத்தவிர ஏனைய ஆசியநாடுகளின் நாணய மதிப்பு பலமடையும் என்று கூறிய அவர் இதனால் பொருளாதாரத் திட்டங்களும் மறுமலர்ச்சித் திட்டங்களும் இடம்பெற வாய்ப்பாக இருக்கும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

[க-14]

## இந்தியாவில் தாழமுக்கம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் தென்மேற்கே தாழமுக்கம் ஏற்படக் கூடும் என்றும் இதனால் இந்தியாவின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

[க-14]

### புத்தாயிரமாம் ஆண்டு

## கொண்டாட்டங்களில் சிக்கல் ஏற்பாட்டாளர்கள் அதிருப்தி

பல்வேறு நாடுகளில் புத்தாயிரமாவது ஆண்டுக் கொண்டாட்டங்களில் சிக்கல் தோன்றியிருக்கின்றதாகவும் மக்களிடையே உற்சாகமின்மை காணப்படுவதாகவும் விழா ஏற்பாட்டாளர்கள் கூறியதாக தெரிய வருகின்றது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் ஒரே நேரத்தில் 2000 ஜோடிகளுக்கு நடைபெறவிருந்த திருமண நிகழ்ச்சி பல விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வு நிழைவுச் சீட்டுக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது,

லண்டனில் புத்தாயிரமாவது கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற இருந்த மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சி ஆயிரக் கணக்கானவர்களுக்கு டிக்கட் கிடைக்காத காரணத்தால் இரத்துச் செய்யப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### புத்தாண்டில்

## புகைபிடிக்கும் பழக்கத்தை விடப்போவதாக நாலேகால் லட்சம் பேர் சபதம்

ஹாலந்து நாட்டில் புத்தாயிரமாம் ஆண்டு முதல் புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிடப்போவதாக சுமார் நாலேகால் லட்சம் பேர் சபதம் செய்துள்ளனர் என்று புகையிலை எதிர்ப்பு இயக்கமான ''ஸ்டிவோரோ'' தெரிவித்துள்ளது.

ஹொலந்தில் புகைப்பழக்கம் உள்ள 41 லட்சம் பேரில் ஒன்றரை இலட்சம் பேர் சென்ற புத்தாண்டின் போது புகைப்பிடிப்பதை விடுவதாக சபதம் செய்திருந்தனர் என்றும் தெரிவித்துள்ள இந்த நிறுவனம் உலகளாவிய ரீதியில் புகைபிடிப்போர் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதை இட்டு தாம் மிகவும் கவலை கொள்வதாயும் இப்பழக்கத்தை தம்மால் இயன்றவரை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது. (க–14)

### சட்டவிரோத்

## ஆயுதக் களைவு நடவடிக்கையில் ஈடுபடும் இந்தோனேசிய படையினர்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில்கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவந்த் முஸ்லிம் கிறிஸ்தவ மோதல்களை கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ள பாதுகாப்புப் படையினர் சட்டவிரோத ஆயுதக் களைவு நடவடிக்கையில் ஈடுபடுவதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்,

இந்த நடவடிக்கை மூலம் நூற்றுக்கணக்கான துப்பாக்கிகள் மற்றும் உள்ளூர் வெடிகுண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டிருப்பதாயும் கூறிய அவர் இந்த நடவடிக்கையை தாம் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு மக்களின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாயும் மேலும் கூறியுள்ளார். (க-14)

## ரஷ்ய அதிபரின் அதிரடி நடவடிக்கை முக்கிய பிரமுகர் பதவி இழந்தார்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தற்காலிக அதிபர் விளாடிமிர் புட்டின் பதவி ஏற்ற ஒரு வாரத்திற்குள்ளேயே அதிரடி நடவடிக்கையாக முக்கிய பதவியில் இருந்த முன்னாள் அதிபர் பொறிஸ் ஜெல்ஸினின் மகளை பதவியில் இருந்து நீக்கிவிட்டதாக ரஷ்ய வானொலி நேற்று தெரிவித்தது.

அச்செய்திமேலும்தெரிவிக்கையில் முன்னாள்ரஷ்ய அதிபரின்ஆட்சிக் காலத்தில் மூத்த ஆலோசகராகப் பணியாற்றிய தற்றியானா ரயற்சாங்கோவை அப்பொறுப்பில் இருந்து நீக்கிய விளாடிமிர் புட்டின் முன்னாள் அரச பேச்சாளரான டிமிற்திறி ஐக்ருசின்கை அப்பொறுப்பிற்கு நியமித்து இருக்கிறார்.

1996 ஆம் ஆண்டு ஜெல்ஸின் மீண்டும் அதிபர் தேர்தலில் நின்றபோது அவர் வெற்றி பெறப் பெரிதும் பாடுபட்டவரான ரயற்சாங்கோ தந்தையின் ஆட்சிக் காலத்தில் பல பிரதமர்கள் நீக்கப்பட்டமைக்கும் பின்னணியில் இருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் ரஷ்ய அதிபராக பதவி வகித்து வந்த பொறிஸ் ஜெல்ஸின் தமது சொந்த விருப்பின் பேரில் பதவியை இராஜினாமா செய்து பிரதமர்பதவியிலிருந்த விளாடிமிர் புட்டினிடம் அதிபர் பதவியை ஒப்படைத்திருந்தமை ஏற்கனவே தெரிந்ததே.

(க-9)

## ஜப்பானில் இருமாடி கட்டடத்தில் தீ விபத்து இரு பாலகர்கள் உட்பட 9 பேர் பலி!

(டோக்கியோ)

ஜப்பானில் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த இருமாடிகளைக் கொண்ட கட்டடமொன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் இரு பச்சிளம் பாலகர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதாக ஜப்பானிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில்;

இந்த வீட்டிலிருந்த 40 வயது பெண்மணி, அவரது மூன்று குழந்தைகள், 24 வயதுடைய மருமகள் அவரது 2 குழந்தைகளும் உயிரிழந்தோரில் அடங்குவர்.

மேலும் அவ் வீட்டிலிருந்த ஒரு வயதுக் குழந்தை ஒன்றும், ஏழு மாதக் குழந்தை ஒன்றும் தீயிற்கு இரையாகி உயிரிழந்துள்ளது.

தீயணைப்புப் படையினர் சிலமணி நேரத்திற்குள் தீயை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த போதிலும் எவரையும் உயிருடன் மீட்க முடியவில்லை.

இந்த விபத்து மின் ஒழுக்கினால் ஏற்பட்ட தீயினாலேயே ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (க-14)

# இலங்கை-தமிழ்நாடு கப்பல் சேவை உயர்மட்டத்தில் தீவிர ஆய்வு

(கொழும்பு)

இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை ஒன்று நடாத்தும் சாத்தியம் பற்றி இரு நாட்டு அரச அதிகாரிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளதாக இலங்கை அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வருடம் இலங்கை வெளியுறவு அசைச்சர் லக்ஷ்மன் கதிரகாமர் இந்தியா சென்ற வேளையில் இரு தரப்பிற்கு இடையே பேச்சு வார்த்தை இடம்பெற்றது.

பின்மீண்டும் கடந்த டிசம்பர் மாதம் 15, 16 ஆம் திகதிகளில் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் இது குறித்த பேச்சு வார்த்தை நடாத்தியிருந்தனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவைக்குப் பதிலாக கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

ஆனாலும் இது குறித்த பேச்சுவாரத்தை முற்றிலும் வெற்றி பெற்றதாக கூற முடியாத நிலையே காணப்படுகிறது.

ஆனாலும் இவ்விடயம் பற்றி கொள்கையளவிலேனும் இணக்கம் தெரிவிக்க தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் அரசு தயங்காது என தமிழக உயர் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்தித்திட்டத்துக்கு ரூபா30கோடி!

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை இவ்வாண்டு மேற்கொள்ள வட-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு 30கோடியே38லட்சரூபாவை ஒதுக்கியுள்ளது.

எட்டுமாவட்டங்களிலும் அம்பாறை மாவட்டத்திற்கே கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் 9கோடியே இருபது லட்சம் ரூபாவும் யாழ், மாவட்டத்துக்கு 7கோடி ரூபாவும், திருகோணமலை, வவுனியா மாவட்டங்களுக்கு தலா 4கோடியே 40லட்சம் ரூபாவும், மட்டக்களப்பு பாவட்டத்துக்கு 4கோடியே 20லட்சம் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 2கோடியே 40லட்சம் ரூபாவும் கிளிநொச்சிக்கு ஒருகோடியே 40லட்சம் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 90 லட்சம் ரூபாவும்ஒதுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம் புதிய முகங்கள் இடம் பெறலாம்

[கொழும்பு]

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் முக்கிய மாற்றம் இடம்பெறலாம் என அமைச்சரவை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஜனாதிபதி செயலகம் நேற்று தெரிவித்துள்ளது.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்; தற்போது சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதியின் செயலர் கே. பாலபட்ட பென்டி நாடு திரும்பிய பின்னர் இம் மாற்றங்கள் இடம் பெறும் எனவும் தெரிவித்துள்ளது.

சமுர்த்தி இளைஞர் விவகார அமைச்சராக கடமைபுரியும் எஸ். பி. திசநாயக்காவிற்கு விவசாய அமைச்சர் பதவி வழங்கப்படும் என நம்பகரமாகத் தெரியவருகிறது,

ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகி பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்துள்ள கலாநிதி சரத் அமுனுகமவிற்கு பொதுசன ஊடகத்துறை அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் லலித் ஐக்கிய முன்னணி தலைவி திருமதி ஸ்ரீமணி அத்துலத் முதலிக்கு மீண்டும் ஏதாவது ஒரு அமைச்சர் பதவிவழங்கப்படலாமென அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [க]

### முன்னாள்...

திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இரு நபர்களும் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் சரிவர நிரூபிக்கப்படாததன் காரணத்தினால் இவர்கள்குற்றம் அற்றவர்கள் எனக் கருதி நீர்கொழும்பு நீதிமன்றம் அவ்விருவரையும் 5000 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட பின்விடுதலை செய்துள்ளது.

கடந்தவருடம் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில் ராமமூர்த்தி ஈ. பி. டி. பியின் நாடளுமன்ற உறுப்பினராக முன்னர் செயற்பட்டவர் என்பதும் பின்னர் மக்கள் ஜனநாயக பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தியவர் என்பதும் ஏற்கனவே தெரிந்ததே.

### தடுத்து...

இளைஞர்களுக்குரிய ஆவணங்களை தமிழ் சிங்கள மொழிகளில் மொழி பெயர்த்து சட்டமா அதிபர் காரியாலயத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், கொழும்பு மாவட்டங்களில் கைது செய்யப்பட்டவர்களுக்குரிய விசாரணைகளை அதே மாவட்ட மேல் நீதிமன்றங்களில் மேற்கொள்ள நடவடிக் எடுக்கப்பட்டுவருகிறது

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பு பார்வதி

கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த திருமதி தம்பு பார்வதி 04. 01. 2000 [செவ்வாய்க்கிழமை] காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05. 01. 2000 (புதன்) இன்று காலை 10. 00 மணியளவில் இல. 75 மானிப்பாய் வீதியிலுள்ள அன்னாரின் மகளின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
சி. சண்முகராசா
[மருமகன்]

வண்ணார்பண்ணை.

(045)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தாய் அடித்ததில் மகள் மரணம்

(யாழ்ப்பாணம்)

தனது மகள் படிக்கவில்லை என்பதற்காக தாய் அடித்ததில் 10 வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வேலணையில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றிமேலும் தெரிய வருவதாலும் தாயின்ால் அடிக்கப்பட்ட சிறுமி அடிவாங்கிய சிறிது நேரத்தில் மயக்கமடைந்ததாகவும் உடனே யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட வேளையில் வழியிலேயே சிறுமி மரணமானதாகவும் தெரியவருகிறது.

யோகராசன் சத்திய ரூபி (வயது 10) என்பவரே மரணமானவராவார். இவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## வீடு எரிந்தது

(யாழ்ப்பாணம்)

கோவிலாக் கண்டியில் நேற்று முன்தினம் இரவு 'பரா' வெளிச்சக் குண்டிலிருந்து விழுந்த ஒருவகை பொறியினால் நெல்மூடைகள் முற்றாக எரிந்து சாம்பரானது. வீடு ஒன்றும் பலத்த சேதத்திற்குள்ளானது.

வே. சுந்தரலிங்கம் என்பவருடைய வீடே முற்றாக எரிந்ததாகும்.

### நான்கு...

கொழும்பு உயர் நீதிமன்றில் இவ் மனுவை இவர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் வீரசிங்கம் (கணவன்) களுத்துறைச் சிறைச்சாலையிலும், பரமேஸ்வரி (மனைவி) வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்

### ஜனாதிபதிக்கு...

மாகாணத்தில் மாடத்துகம என்னும் இடத்தைச் சேர்ந்தவராவார்

வடமேல் மாகாண சபை முதலமைச்சர் போடிபிரேமலால் திஸநாயக்கா இக்கண்தானம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

முதல் அமைச்சரின் இக்கடிதத்திற்கு இதுவரை ஜனாதிபதி எதுவித பதிலும் அளிக்கவில்லை என்றும் முதல் அமைச்சர் தெரிவித்தார்.

## குருநாகலில் குண்டர் தாக்குதல் தமிழர் வீடுகள் சேதம்; பதற்றம் நீடிப்பு

குருநாகலில் தமிழர்கள் வாழும் பகுதிக்குள் புகுந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குண்டர்கள் தாக்கியதில் 3குடியிருப்புக்கள் எரிந்து சாம்பலாகியதுடன் மேலும் இரு குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன.

குருநாகல் நீர்கொழும்பு வீதி கல்வல பகுதியில் தமிழ் மக்கள் வாழும் பகுதிக்குள் பொல்லுகள், கத்திகள், வாள் சகிதம் நேற்று முன் தினமிரவு 12 மணியளவில் புகுந்து கொண்ட காடையர்களே மேற்படி சேதத்தை விளைவித்தவர்களாவர்.

இப்பகுதி வாழ் தமிழ்மக்கள் குண்டர்களை எதிர்த்து தாக்கியதில் காயமடைந்த 4குண்டர்களும் ஒரு தமிழரும் குருநாகல் வைத்திய சாலையில் அனுமதிக்க பட்டிருப்பதாக மேலும் நான்கு தாக்குதல் காரர்கள் விசாரணையின் பொருட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது,

## கொழும்புத் துறைமுகத்தில்

## கப்பலில் பெருமளவு பொருட்கள் கொள்ளை; பொலீசார் தீவிர விசாரணை!

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கப்பல் ஒன்றிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக பொலிசார் விசாரணைகள் மேற்கொண்டு வருதாயும் ஆனால் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

### 41 வேலையற்ற பட்டதாரி . . .

பி.எ வேலணை மேற்கு வேலணை
சுப்பிரமணியம் சசிகலா பி,எ வேலணை கிழக்கு, வேலணை 04
இராசரட்ணம் மகேஸ்வரி பி. எ, 05 வட்டாரம் நயினாதீவு

**ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவு**

அழகையா அறிவரசி 31 மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம்
மிறோன் லியோனா லீனஸ் றட்ணம் கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை
மேரி விஜயநந்தினி நல்லையா வலந்தலை காரைநகர்

**யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு**

மரியதாஸ் கியூமன் 8/8 மத்திய கிழக்கு வீதி குருநகர் யாழ்ப்பாணம்,
சர்வலோஜினி திருச்செல்வம் கந்தகோட்டம் சித்தன்கேணி
திருநாவுக்கரசுயோகேந்திரன் மணல்தறை ஒழுங்கை கந்தர் மடம் யாழ்ப்பாணம்.
ஆன் ராணி பிறிற்ரோ 18/2 மத்தி - கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணம்
வசந்தி ஜெயக்குமார் 161 ஆனந்தன் வடலி வீதி அரியாலை
றாகினி கந்தையா 22[46] பலாலி வீதி யாழ்ப்பாணம்

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவு**

தியாகராசா சந்திரகாசன் மஞ்சத்தடி.இணுவில் சுன்னாகம்
இராசையா புஸ்பலாதேவி 27/31 முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
நடராசா சிவகுமார் பூதவராயர் வீதி திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்
இராமன் ஜெயதாஸ் முனியப்பர் கோவிலடி கோண்டாவில்மேற்கு கோண்டாவில்.

**சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

கந்தசாமி குமாரவேல் இணுவில் மேற்கு கந்தசாமி கோவிலடி இணுவில்
செல்லத்துரை நகுலேஸ்வரி எச்சாட்டி,சுதுமலை வடக்கு சுதுமலை.
நடராசா சுசீந்திரராசா கல்பொக்கணை, சுன்னாகம்.

**சங்கானை பிரதேசசெயலர் பிரிவு-**

சறோஜினிதேவி சபாநாயகம் மூளாய் வீதி, வட்டுக் கோட்டை.
சிவலோஜினி பெஸ்திநாதன் ராசா தொல்புரம் சுழிபுரம்
குமரேஸ்வரி சுந்தரலிங்கம் ஆலோலை ஒழுங்கை, வட்டு தென்மேற்கு வட்டுக் கோட்டை

**உடுவில் பிரதேச செயலர் பிரிவு-**

யுஸ்பலோஜினி கந்தசாமி கற்பகப்பிள்ளையார் கோலடி உடுவில்கிழக்கு சுன்னாகம்
ஆனந்தக்கௌரி ஜெயக்குமார் மஞ்சத்தடி இணுவில்,
நடராசா காசிவேந்தன் இணுவில் கிழக்கு இணுவில்

**தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு**

பரமேஸ்வரி அம்பிகைபாலன் காங்கேசன் துறை வீதி மல்லாகம்.
ஜெயந்தி அன்ரன் இராசநாயகம் மானா புலம் அளவெட்டி கிழக்கு, அளவெட்டி
செந்தில்வாணி செல்லத்துரை அலுக்கை, அளவெட்டி
ஜமுனா அருள்ராசா டச்சுறோட் அளவெட்டி வடக்கு, அளவெட்டி

**கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

பொன்னம்பலம் சுகிர்தன்
விஜயராசா நீலாயினி

**சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு**

நந்தகுமாரன் நாகநந்தினி
ஆறுமுகம் உமாதேவி
முருகேசு திவ்வியபாலன்
யோகராசா ஸ்ரீ சந்திரவதனி
பத்மநாதன் சுகிர்தா

**மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு**

சச்சிதானந்தம் பிரேமராஜ்
பரஞ்சோதி பாலகரன்
அப்புத்துரை ரவிச்சந்திரன்

### மக்கள் . . .

லூசியன்ராஜகருண நாயக்க ஆகியோருடன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இவ் உரையாடலை நடத்தினார்.

### நோர்வே. . .

சரியான முறையில் பயன்படுதிக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில், அரசு விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு நேர்வே அரசை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமாக கொண்டு ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்

ஈ, பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிடுகையில், நோர்வே வெளியுறவு அமைச்சரினால் முன்னெடுத்துச் செல்லப்படும் இனப்பிரச்சினை தீர்வுகுறித்த ஆராய்வை தொடர்ந்து ஆராய்ந்து அரசும் விடுதலைப் புலிகளும் ஓர் சமரச இணக்கப்பாட்டிற்கு வருவது அவசியம் எனக் குறிப்பிட்டார்.